Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
FRIDAY, DECEMBER 01, 2023

வெள்ளிக்கிழமை டிசெம்பர் 01, 2023 | ஒளி: 09 கதிர் 140 | பக்கம்:07 | நகரப்பதிப்பு★ | FREE



# மரக்கறிகள் எகிறின

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக சந்தையில் மரக்கறிகளின் விலைகள் வேகமாக அதிகரித்துள்ளதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சி P2



### பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்படும் கருத்துக்கு

# "வழக்கு தொடுக்க முடியாது"

விளையாட்டுத் துறை அமைச்சராக ரொஷான் ரணசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்த விடயமொன்று தொடர்பில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இது பாராளுமன்ற சிறப்புரிமையை மீறுகின்ற விடயம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சுட்டிக்காட்டியபோது பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்படும் கருத்தை அடிப்படையாகக்கொண்டு வழக்கு தொடுக்க முடியாது. அதில் எந்த சந்தேகமும் இல்லை. என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பதிலளித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (30) விசேட கூற்றொன்றை முன்வைத்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச,

தொடர்ச்சி P2

# "கேக்"விற்ற சிறுவன் கைது

மட்டக்களப்பில் பேக்கரியில் ''கேக் ''விற்ற ஒரு சிறுவன் மாவீரர் தினத்தை காரணம் காட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை தொடர்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி.யான கோவிந்தன் கருணாகரம் சபையின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

தொடர்ச்சி P2

# 21/4 தாக்குதல் பின்னணியில் உள்ளூர் அரசியல் சக்திகள்




உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தாக்குதலின் பின்னணியில் உள்ளூர் அரசியல் சக்திகள் ஈடுபட்டுள்ளதாக 50 சதவீதமான இலங்கையர்கள் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

# புலிகளின் சீருடையை ஒத்த ஆடைகள்

## ஆறு பேரிடம் வாக்குமூலம்

மாவீரர் தின நிகழ்வில் தமிழீழ விடுதலைப்புலிகளின் போராளிகளின் ஆடைகளை ஒத்த ஆடைகளை சில சிறுவர்கள் அணிந்து வந்தனர் எனும் குற்றச்சாட்டில், கோப்பாய் பொலிஸார் ஆறு பேரிடம் வாக்கு மூலங்களை பெற்றுள்ளனர்.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு முன்பாக கடந்த திங்கட்கிழமை (27) நடைபெற மாவீரர் நாள் நிகழ்வின் போது, விடுதலைப்புலிகளின் போராளிகள் போன்ற ஆடைகளை சில சிறுவர்கள் அணிந்து இருந்தனர் என சில புகைப்படங்கள், சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வந்தன.

தொடர்ச்சி P2



# உயர்ஸ்தானிகர் கோபால் நயினா தீவுக்கு விஜயம்



■ நிதர்ஷன் வினோத்

யாழ்.குடாநாட்டுக்கு விஜயம் செய்துள்ள இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பால்கே யாழ். தீவு பகுதிகளுக்கான விஜயத்தின்போது நயினா தீவுக்கு, வியாழக்கிழமை (30) சென்றிருந்தார்.

தொடர்ச்சி P2

# வவுனியாவில் தம்பதி வெட்டிக்கொலை

## மூன்று கத்திகள் மீட்பு: 5 பவுண் நகை மாயம்

■ க. அகரன்

வவுனியா செட்டிகுளம் பகுதியில் கணவனும் மனைவியும் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளமை பெரும் அதிர்ச்சியை ஏற்ப்படுத்தியுள்ளது. குறித்த சம்பவம் செட்டிகுளம் நகரப்பகுதியில் வியாழக்கிழமை (30) இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது. செட்டிகுளம் பிரதான வீதியில் குறித்த தம்பதிகளின் மகன் வியாபாரநிலையம் ஒன்றை நடாத்திவருகின்றார். அந்த வர்த்தக நிலையத்துக்குப் பின்னால் உள்ள தங்குமிடத்தில் குறித்த தம்பதியினர் வசித்துவருகின்றனர்.

தொடர்ச்சி P2



# 2,500 போதை குளிசைகள் சிக்கின

கிழக்கு மாகாணத்தில் பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களை இலக்கு வைத்து பாரியளவிலான போதைப்பொருள் வியாபாரி ஒருவரை வாழச்சேனை பிரண்டாரச்சேனை பிரதேசத்தில் வைத்து பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

தொடர்ச்சி P2

# "மறுசீரமைப்புகளில் மாற்றமும் ஏற்படாது"



சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட இரண்டாம் தவணை கடன் கிடைக்கவுள்ள நிலையில் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள மறுசீரமைப்பு திட்டங்களில் எவ்வித மாற்றமும் ஏற்படாது என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (30) விசேட கூற்றை விடுத்து போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# நுவரெலியா தபாலக விவகாரம் மீண்டும் போராட்டம்

■ செ.திவாகரன் டி.சந்ரு

நுவரெலியாவில் ஆங்கிலேயரால் நிர்மாணிக்கப்பட்ட பழமையான தபால் நிலையத்தை இந்தியாவின் தாஜ் சமுத்ரா ஹோட்டலுக்கு கைமாற்றுவதற்கு அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு எதிராக நுவரெலியா தபால் நிலையத்திற்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் வியாழக்கிழமை (30) மதிய உணவு இடைவேளையில் முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ச்சி P2




# பாப்பரசர் அறிவிப்பில் ஐ.ம.ச இருக்கும்



உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் உண்மையை தேடிக்கொள்ளும் வரை, சத்தியத்தை தேடும் போராட்டத்தை மேற்கொள்ளுமாறு பரிசுத்த பாப்பரசர் அறிவிப்பு செய்துள்ளார். அந்த போராட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியும் தொடர்ந்தும் இருக்கும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (30) விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் இந்த சபையில் பல தடவைகள் விவாதங்களை நடத்தி இருக்கிறோம். ஆனால் அதற்கு பின்னர் எதுவும் இடம்பெறவில்லை.

தொடர்ச்சி P2

# 'யாழில் மலையகத்தை உணர்வோம்'

■ நிதர்ஷன் வினோத்

மலையகம் -200, "யாழில் மலையகத்தை உணர்வோம்" என்ற தொனிப்பொருளிலான நிகழ்வு வியாழக்கிழமை (30) ஆரப்பமானது.

யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் ஆரம்பமாகியுள்ள இந்த நிகழ்வு எதிர்வரும் மூன்றாம் திகதிவரை இடம்பெறும்.

யாழ்ப்பாணம் சிவில் அமைப்புகள், கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனத்துடன் இணைந்து நடாத்தும் இந்த நிகழ்வின் ஆரம்ப நிகழ்வில் வடக்கு மாகாண கல்விப் பணிப்பளர் ஜோன் குயின்ரஸ், யாழ். மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பி.முத்துலிங்கம் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்படும் கருத்துக்கு

# “வழக்கு தொடுக்க முடியாது”



பாராளுமன்ற அதிகாரங்களும் சிறப்புரிமைகளும் சட்டத்தின் கீழ் பாராளுமன்றத்தில் பேசப்படும் விடயம் தொடர்பாக பாராளுமன்றத்துக்கு வெளியில் எந்த விசாரணையும் மேற்கொளள முடியாது. அதேநேரம் அதனை அடிப்படையாகக்கொண்டு குடியியல் மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளுக்கு அல்லது கைது செய்யப்படுவதற்கு அல்லது சிறைப்படுத்துவதற்கும் முடியாது.

இவ்வாறான நிலையில் பாராளுமன்ற அதிகாரங்களும் சிறப்புரிமைகளும் சட்டத்தை முற்றாக மீறி, விளையாட்டுத்துறை அமைச்சராக ரொஷான் ரணசிங்க இந்த சபையில் தெரிவித்த கருத்தொன்றை அடிப்படையாக்கொண்டு ஒரு சிலரால் வழக்கு தொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த சட்டத்தின் கீழ் ரொஷான் ரணசிங்கவின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகளை பாதுகாக்க கடமைப்பட்டுள்ள சபாநாயகர் இது தொடர்பாக மேற்கொள்ளப்போகும் நடவடிக்கை என்ன எனக் கேள்வி எழுப்பினார்.

இதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பதிலளிக்கையில், பாராளுமன்ற அதிகாரங்களும் சிறப்புரிமைகளும் சட்டத்தின் பிரகாரம் பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்படும் கருத்தை அடிப்படையாகக்கொண்டு வழக்கு தொடுக்க முடியாது. அதில் எந்த சந்தேகமும் இல்லை. அது தொடர்பில் கவனம் செலுத்துவேன் என்றார்.

இதன்போது எழுந்த எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. , பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்தை அடிப்படையாகக்கொண்டு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு எதிராக யாராவது வழக்கு தொடுத்தால், குறித்த நபரை பாராளுமன்ற சிறப்புரிமை குழுவுக்கு அழைக்கும் அதிகாரம் உங்களுக்கு இருக்கிறது. எனவே நீங்கள் அதனை செய்ய வேண்டும் என்றார்.

# “கேக்”விற்ற சிறுவன் கைது

பாராளு மன்றத்தில் வியாழக்கிழமை (30) இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் சுகாதார அமைச்சுக்கான செலவீனத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே இந்த விவகாரத்தை சபையின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

மட்டக்களப்பில் கடந்த வாரம் 10 க்கும் மேற்பட்டவர்கள் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். எனக்கு தெரிந்த ஒரு சிறுவன் மட்டக்களப்பில் உள்ள பேக்கரியில் வேலை செய்கின்றார். அவர் கடந்த வாரம் கேக் ஒன்றை விற்றுள்ளார். அந்த கேக்கை வாங்கியவர் அதனை கொண்டுபோய் அதில் வேலுப்பிள்ளை பிரபாகரன் என பெயர் எழுதியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக பொலிஸார் குறிப்பிட்ட பேக்கரிக்கு சென்று சி.சி.டிவி கமராவை ஆராய்ந்துள்ளனர். அதில் அந்த சிறுவன் கேக்கை மாத்திரம்தான் கொடுத்துள்ளார். அதில் வேலுப்பிள்ளை பிரபாகரன் என எழுதிக்கொடுக்கவில்லை. ஆனால், அந்த பேக்கரியில் வேலைசெய்த குற்றத்துக்காக பயங்கரவாதத்தடை சட்டத்தின் கீழ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இப்படியே செல்லுமாக இருந்தால் இந்த நாடு அழிந்து போகும் என்றார்.

# 21/4 தாக்குதல் பின்னணியில் உள்ளூர் அரசியல் சக்திகள்

பதிலளித்தவர்களில் கிட்டத்தட்ட 40 சதவீதமானோர் கருத்து தெரிவிக்க மறுத்துள்ளனர் அல்லது தங்களுக்கு இதுதொடர்பில் எந்தவித கருத்தும் இல்லை என்று கூறுகிறார்கள்.

ஒக்டோபர் மாதம் உருவாக்கிய சிண்டிகேட்டட் கணக்கெடுப்பினால் (Syndicated Surveys) நடத்திய கணக்கெடுப்பின் படி, 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தாக்குதலின் பின்னணியில் உள்ளூர் அரசியல் சக்திகள் ஈடுபட்டுள்ளதாக இலங்கை சனத் தொகையில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் - அதாவது 53% - நம்புகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதல்களின் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்பது குறித்து நாட்டில் நிலவும் பின்வரும் மூன்று கருத்துக்கள் கணக்கெடுப்பில் பங்குபற்றியவர்கள் இடையே கேட்கப்பட்டன, தங்களால் மிகவும் ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்தை தேர்ந்தெடுக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

ஆபத்தான வெளிநாட்டு சக்திகளுடன் இணைந்து செயற்பட்டு வந்த இலங்கை தீவிரவாதிகளால் இது மேற்கொள்ளப்பட்டது.

இது உள்ளூர் அரசியல் சக்திகளுடன் இணைந்து செயற்பட்டு வந்த இலங்கை தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்பட்டது.

உள்ளூர் அரசியல் சக்திகள் மற்றும் ஆபத்தான வெளிநாட்டு சக்திகளுடன் இணைந்து செயற்பட்டு வந்த இலங்கை தீவிரவாதிகளால் இது மேற்கொள்ளப்பட்டது.

53% உள்ளூர் அரசியல் சக்திகள் இதில் சம்பந்தப்பட்டிருப்பதாக நம்புகின்றனர் - 30% இரண்டாவது பதிலைத் தேர்ந்தெடுத்தனர், 23% மக்கள் மூன்றாவது பதிலைத் தேர்ந்தெடுத்தனர். உள்ளூர் அரசியல் சக்திகளின் தலையீடு இல்லாமல் இது மேற்கொ ள்ளப்பட்டதாக 8% பேர் மட்டுமே நம்புகின்றனர் (முதல் பதில்). 39% சதவீதம் பேர் தங்களுக்கு இது தொடர்பாக எந்தவித கருத்தும் இல்லை என்றும் அல்லது கருத்து தெரிவிக்க விருப்பமில்லை என்றும் கூறியுள்ளனர்.

2019 ஏப்ரல் 21, (உயிர்த்த ஞாயிறு) அன்று மூன்று கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் மூன்று ஆடம்பர ஹோட்டல்களை குறிவைத்து நடத்தப்பட்ட தொடர் தற்கொலை குண்டுவெடிப்புகளில் மொத்தமாக 269 நபர்கள் கொல்லப்பட்டனர்.

கருத்துக்கணிப்பை நடைமுறைப்படுத்தல்

நாடளாவிய ரீதியில் தேசியளவில் வயது வந்த இலங்கையர்கள் 1,029 பேர் கொண்ட பதில் மாதிரியை அடிப்படையாகக் கொண்டு 2023 அக்டோபரில் இந்த கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது. 95% நம்பக இடைவெளி மற்றும் 3% வழு எல்லையை உறுதிசெய்யும் வகையில் இதன் மாதிரி மற்றும் வழிமுறைகள் கட்டமைக்கப்பட்டுள்ளன.

வெரிட்டே ரிசர்ச் உருவாக்கிய சிண்டிகேட்டட் கணக்கெடுப்பு (Syndicated Surveys) கருவியின் ஒரு அங்கமாக இக்கருத்துக்கணிப்பு வாக்களிப்பு பங்காளியான வன்கார்ட் சர்வே (பிரைவேட்) லிமிடட்டினால் நடத்தப்பட்டது. சிண்டிகேட்டட் கணக்கெடுப்பு கருவியானது இலங்கை மக்களின் உணர்வுகளை அளவிடுவதற்கான வாய்ப்பை மற்ற நிறுவனங்களுக்கும் வழங்குகிறது.

# புலிகளின் சீருடையை ஒத்த ஆடைகள்

அவை தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் , படங்களில் இனம் காணப்பட்ட சிறுவர்களின் பெற்றோரை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து அவர்களின் வாக்கு மூலங்களை பெற்றுள்ளனர்.

வாக்கு மூலங்களின் அடிப்படையில் மேலதிக விசாரணைகளை தாம் முன்னெடுக்க உள்ளதாகவும் , எவரையும் இது வரையில் தாம் கைது செய்யவில்லை எனவும் கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

# வவுனியாவில் தம்பதி வெட்டிக்கொலை

வழமைபோல அவர்களது மகன் வியாபாரநிலையத்தை மூடிவிட்டு அண்மையில் உள்ள தனது வீட்டிற்கு புதன்கிழமை (29) இரவு சென்றுவிட்டார்.

குறித்த தம்பதியினர் வியாபார நிலையத்திற்கு பின் பக்கமாகவுள்ள தங்கும் இடத்தில் உறங்கச்சென்றுள்ளனர்.

இந்நிலையில், வியாபார நிலையத்தை திறப்பதற்காக வியாழக்கிழமை (30) காலை வருகைதந்த மகன், தனது தாயும் தந்தையும் இரத்த வெள்ளத்தில் கிடந்தமை கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டது. சம்பவ இடத்திற்கு சென்ற செட்டிகுளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சம்பவத்தில் செட்டிகுளம் பகுதியை சேர்ந்த பசுபதிவர்ண குலசிங்கம் வயது 72 என்ற முதியவரும், அவரது மனைவியான 68 வயதான கனகலட்சுமி என்பவருமே படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களது சடலங்களுக்கு அருகில் மூன்று கத்திகள் மீட்கப்பட்டுள்ளன. 5 பவுண் பெறுமதிமிக்க தங்கநகை ஒன்றும் காணாமல்போயுள்ளது. சம்பவம் தொடர்பில் செட்டிகுளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# உயர்ஸ்தானிகர் கோபால் நயினா தீவுக்கு விஜயம்

நயினா தீவுக்கு விஜயம் செய்த இந்திய உயர்ஸ்தானிகர் நாகபூசணி அம்மன் ஆலயம், மற்றும் நாக விகாரை ஆகியவற்றில் வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இதன்போது உயர்ஸ்தானிகருக்கு மலர் மாலை அணிவித்து, பொன்னாடை போர்த்தி வரவேற்பளிக்கப்பட்டது.

தொடர்ந்து நாக விகாரை விகாராதிபதியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் நயினா தீவில் மீள் புதுப்பிக்கதக்க மின் உற்பத்தி திட்டங்களை அமுல் செய்வது குறித்தும் அதன் அவசியம் தொடர்பாகவும் ஆராய்ந்துள்ளார்.

# 2,500 போதை குளிசைகள் சிக்கின

சந்தேகநபரை கைது செய்யும் போது, பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் அவரிடம் 2,500 போதைப்பொருட்களை கண்டுபிடித்துள்ளனர்.

காரில் பயணித்த போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், கைது செய்யப்பட்டவர் மட்டக்களப்பு அரசடி பகுதியைச் சேர்ந்த 26 வயதுடையவராவார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# “மறுசீரமைப்புகளில்...

இலங்கைக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்குமிடையிலான விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்துக்கு சர்வதேச கடன் வழங்குநர் குழு இணங்கியுள்ளது .இதனை பாரிய வெற்றியாக கருதுகிறோம்.இலங்கையின் பிரதான கடன் வழங்குநர்களான இந்தியா,ஜப்பான்,பிரான்ஸ் ஆகிய நாடுகளும் சீனாவும் கடன் மறுசீரமைப்புக்கு சார்பான நிலைப்பாட்டில் உள்ளது சர்வதேச நாணய நிதியத்தின் முதல் தவணை நீடிக்கப்பட்ட கடன் தவணையுடன் பொருளாதார ஸ்திரத்தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நாணய நிதியத்தின் நிபந்தனைகளை செயற்படுத்தும் போது ஏற்பட்ட காலதாமதத்தால் இரண்டாம் தவணை நீடிக்கப்பட்ட கடன் தாமதமானது .இதனை எதிர்க்கட்சியினர் தமது அரசியல் பிரசாரத்துக்காக பயன்படுத்திக் கொண்டார்கள்.

நீடிக்கப்பட்ட இரண்டாம் தவணை கடனை பெற்றுக்கொள்வதற்கு மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி பெற்றுள்ளன. எனினும் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள மறுசீரமைப்பு திட்டங்களில் எவ்வித மாற்றமும் ஏற்படாது. அடுத்த மாதம் இரண்டாம் கட்ட கடன் தொகை கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். என்றார்.

# நுவரெலியா தபாலக...

தபால் நிலையத்துக்கு முன்பாக ஒன்றுதிரண்ட நுவரெலியா தபால் ஊழியர்கள் கறுப்புக் கொடிகளையும் பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

“2024ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் சம்பளத்தை 20 ஆயிரம் ரூபாயாக அதிகரி” “வாழ்க்கைச் செலவை குறை”, “மக்களுக்கு நிவாரணம் வழங்கு”, “மின்சாரக் கட்டணத்தை குறை” என எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எவ்வாறாயினும் தமது பிரச்சினைக்கான தீர்வை வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காவிட்டால் எங்களது தொழிற்சங்க நடவடிக்கையை தீவிரப்படுத்தி பாரிய போராட்டங்களை மேற்கொண்டு அரசாங்கத்தின் கொள்கைகளில் மாற்றம் கொண்டு வர முயற்சிப்போம் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர் .

# பாப்பரசர் அறிவிப்பில் ஐ.ம.ச இருக்கும்



தாக்குதல் தொடர்பில் ஆராய குழுவொன்றை அமைப்பதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

தெரிவுக்குழு ஒன்றை அமைக்கவேண்டும் என சபாநாயகரான நீங்கள் தெரிவித்தீர்கள். அமெரிக்க பென்டகன் தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொள்ள அமைக்கப்பட்ட விசாரணைக்குழுக்கு ஒத்ததாக எதிர்க்கட்சியின் தலைமையில் விசாரணை குழு அமைப்பதே யோக்கியம் என நாங்கள் தெரிவித்திருந்தோம். அதேபோன்று கோட்டாபய ராஜபக்ஷ அதிகாத்துக்கு வரும்போது இதன் சூத்திரதாரிகளை தேடுவதாகவே தெரிவித்தார். அத்துடன் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் உண்மையை தேடிக்கொள்ளும் வரை, சத்தியத்தை தேடும் போராட்டத்தை மேற்கொள்ளுமாறு பாப்பரசர் அறிவிப்பு செய்துள்ளார். அந்த போராட்டத்தில் நாங்களும் இருக்கிறோம் என்ற விடயத்தை தெரிவித்துக்கொள்கிறோம் என்றார;.

# ‘யாழில் மலையகத்தை உணர்வோம்’

“யாழில் மலையகத்தை உணர்வோம்” நிகழ்வு இடம்பெறும் மண்டபத்தில் மலையக மக்களின் கடந்தகால மற்றும் தற்போதைய வாழ்வியலை உணர்த்தும் கண்காட்சியும் இடம்பெற்று வருகின்றது.





# மரக்கறிகள் எகிறின

அதற்கமைய ஒரு கிலோ கிராம் மரக்கறிகளின் விலைகளில் விபரம்:

போஞ்சி - 800 முதல் 850 ரூபாய்
கெரட் - 550 முதல் 600 ரூபாய்
முட்டைகோவா - 540 ரூபாய்
தக்காளி - 590 ரூபாய்
பீர்க்கங்காய்- 450 ரூபாய்
புடலங்காய் - 520 ரூபாய்
கறி மிளகாய் - 950 ரூபாய்
கத்தரிக்காய் - 520 ரூபாய்
வெண்டைக்காய் - 350 ரூபாய்



## மலக்கழிவு, திண்மக்கழிவுகளை

# கொட்டி சேகரிக்க தடை

### மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு

**ரொஜேரியன் லெம்பட்**

மன்னார் நகர சபையினால் சேகரிக்கப்படும் மலக்கழிவு, திண்மக்கழிவுகளை மன்னார்-யாழ்ப்பாணம் பிரதான வீதி ,பாப்பாமோட்டை பகுதியில் கொட்டி சேகரிக்க மேன் முறையீட்டு நீதிமன்றம் 23 ஆம் திகதி தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதனால் மன்னார் நகர சபையினால், மன்னார் நகர பகுதியில் திண்மக்கழிவு சேகரிப்பு மற்றும் மலக்கழிவு அகழ்வு ஆகியவை உடனடியாக நிறுத்தப்பட்டது.

மன்னார்-யாழ்ப்பாணம் பிரதான வீதி மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பாப்பாமோட்டை பகுதியில் மலக்கழிவு மற்றும் திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையம் அமைந்துள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன்,சுமார் 60 மில்லியன் ரூபாய் நிதி செலவில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஊடாக 2012 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட குறித்த திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையம் மன்னார் நகர சபையிடம் கையளிக்கப்பட்டது.

இந்நிலையில் மன்னார் நகர சபை பிரிவில் சேகரிக்கப் படுகின்ற திண்மக்கழிவுகள் மற்றும் மலக் கழிவுகள் அகற்றப்பட்டு குறித்த நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டு 2014 ஆம் ஆண்டு முதல் பாதுகாப்பாக சேகரிக்கப்படுகிறது. குறித்த செயல்பாடுகள் கடந்த 10 வருடங்களாக இடம்பெற்று வருகின்றன. ஏனைய பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள மலக் கழிவுகளும் இங்கு சேகரிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் கொழும்பில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்று மன்னார் நகர சபைக்குச் சொந்தமான மலக்கழிவு மற்றும் திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்திற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தது.

குறிப்பாக குறித்த பகுதியில் நிலத்தடி நீர் மாசு படுவதாகவும்,குறித்த பகுதி பறவைகள் சரணாலயத்திற்கு உரிய இடம் என கோரி மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் கடந்த 8 ஆம் திகதி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த நிலையில், மன்னார் நகர சபைக்குச் சொந்தமான மலக்கழிவு மற்றும் திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தில் எவ்வித கழிவுகளும் கொட்டக்கூடாது என கொழும்பு மேன்முறையீட்டு நீதி மன்றத்தினால் கடந்த 23 ஆம் திகதி தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைவாக புதன்கிழமை (29) முதல் மலக்கழிவு மற்றும் திண்மக்கழிவு சேகரிக்கும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளது.

திண்மக்கழிவு மற்றும் மலக்கழிவு அகழ்வு நிறுத்தப்பட்டமையினால் மன்னார் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

குறிப்பாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் உள்ள மலசல கூட மலக்கழிவுகள் நாள் ஒன்றுக்கு 7 தடவைகள் அகற்றப்பட்டு வருகிறது.

தற்போது மல சல கூட மலக்கழிவுகள் வைத்தியசாலையில் அகற்ற முடியாத நிலை ஏற்பட்டு உள்ளமையினால் வைத்தியசாலையில் உள்ள நோயாளர் விடுதிகளில் உள்ளவர்கள் பல்வேறு இடர்களுக்கு முகம் கொடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் மாவட்டத்தின் பல பாகங்களில் திண்மக்கழிவுகள் அகழ்வு செய்யப்படாமையினால் பல பாகங்களிலும் திண்மக்கழிவுகள் கொட்டப்பட்ட நிலையில் காணப்படுகிறன.

இதனால் மக்களும் அரச திணைக்களங்கள் மற்றும் வைத்தியசாலை தரப்பினரும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டுள்ள தடை உத்தரவை மீளப்பெற்றுக்கொள்ள மன்னார் நகர சபை எதிர்வரும் திங்கட்கிழமை(4) கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய உள்ளது.

குறித்த காணி அரச காணியாக காணப்பட்டுள்ள நிலையில் மன்னார் நகரசபைக்கு ஒதுக்கப்பட்ட நிலையில் 2012 ஆம் ஆண்டு குறித்த காணியில் திண்மக்கழிவு மற்றும் மலக்கழிவு முகாமைத்துவ நிலையம் அமைக்கப்பட்டது.

இந்த நிலையில் குறித்த காணி பறவைகள் சரணாலயத்திற்கு சொந்தமானதாக அடையாளம் காணப்பட்டு 2016 ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிறுவனின் சடலம் கரையொதுங்கியது



**பேரின்பராஜா சபேஷ்**

மட்டக்களப்பு - புன்னக்குடா கடலில் நண்பர்களுடன் செவ்வாய்கிழமை (28) நீராடிக்கொண்டிருந்த போது நீரில் மூழ்கி காணாமல் போன செங்கலடி ஏறாவூர் எல்லை வீதியைச் சேர்ந்த ஜெகன் லதுஷன் என்ற 15 வயதுடைய சிறுவனின் சடலம் களுவன்கேணி பிரதேசத்தில் புதன்கிழமை (29) கரையொதுங்கியது.

ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் சிறுவனின் சடலம் ஒப்படைக்கப்பட்டதையடுத்து திடீர் மரண விசாரணையின் பின்னர் உடற்கூறு பரிசோதனைக்காக சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து ஏறாவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



## தோணாவையில் வெள்ளம்

எம் எஸ் எம் நூர்தீன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக காத்தான்குடியில் வடக்கு , தெற்கு , கிழக்கு போன்ற பகுதிகளிலும் தோணாவை அண்டிய பல பிரதேசங்களிலும் வெள்ளம் ஏற்பட்டுள்ளதுடன் அதனால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

வீடுகளில் வெள்ளம் புகுந்துள்ளதால் குடும்பங்கள் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கியுள்ளதுடன் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வீடுகள், இடம் பெயர்ந்த குடும்பங்கள் தொடர்பில் கிராம உத்தியோகத்தர்களினால் விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வெலிகந்தயில் பஸ் விபத்து; நால்வர் படுகாயம்



பொலன்னறுவையில் இருந்து வெலிகந்த சிங்கபுர பகுதியில் உள்ள தனியார் அரிசி ஆலை ஒன்றில் பனியாற்றும் ஊழியர்களை ஏற்றிச் சென்ற பஸ் முத்துவெல்ல பிரதேசத்தில் விபத்துக்குள்ளான சம்பவம் வியாழக்கிழமை (30) பதிவாகியுள்ளது.

குறித்த பஸ்ஸில் சுமார் எண்பது ஊழியர்கள் இருந்துள்ளதுடன் , விபத்தில் படுகாயமடைந்த நால்வர் பொலன்னறுவை வைத்தியசாலையில் அனுமதி க்கப்பட்டதாகவும் சிறு காயங்களுக்கு உள்ளான ஊழியர்கள் சிகிச்சை பெற்று மருத்துவமனையில் இருந்து வெளியேறியதாகவும் தெரியவந்துள்ளது.

## வெள்ளக்காடு




**ஷாஜஹான்**

தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக நீர்கொழும்பு போலவலான பிரதேசத்தில் போலவலான நிமல மரியா மகா வித்தியாலயத்தின் ஆரம்ப பிரிவு வகுப்புகள் நடத்தப்படும் வகுப்பறைக்குள் வெள்ளநீர் புகுந்துள்ளது.

இந்நிலை சில வாரங்களாக காணப்படுவதாகவும் இதன் காரணமாக மாணவர்களும் பிரதேசவாசிகளும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளதாகவும் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.














**கம்பஹா மாநகர சபை**

**2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட அறிக்கை**

252 ஆவது அதிகாரத்தில் மாநகர சபை கட்டளைச் சட்டம் 212 (ஆ) உறுப்புரைக்கு அமைவாக கம்பஹா மாநகர சபையின் 2024 ஆம் ஆண்டுக்கான வேலை அட்டவனை வரவு செலவு திட்ட அறிக்கையினை 2023.12.01 ஆம் திகதி முதல் 07 நாட்களுக்கு பொது மக்களின் பரிசோதனைக்காக இவ் காரியாலையத்தில் வைத்திருக்கப்படும் என தெரிவித்துக் கொள்கிறோம்.

**லோச்சனா பாலசூரியா**
**நகரசபை ஆணையாளர்**
**அதிகாரங்கள், செயல்பாடுகள்,**
**கடமைகளை நிறைவேற்றும் அதிகாரி**
**கம்பஹா மாநகர சபை**
**2023.11.28**

# தொற்றா நோய்களால் ஏற்படும் மரணங்கள் அதிகரிப்பு

நாட்டில் இடம்பெறும் திடீர் மரணங்களை பார்க்கும் போது,"இன்னும் கொஞ்ச காலம் வாழவேண்டியவர், திடீரென மரணித்துவிட்டார்" எனக் கூறுவதை கேள்விப்பட்டிருப்போம். எவ்விதமான நோய்களுக்கும் உள்ளாகாதவர்களே திடீரென மரணித்துவிடுகின்றனர்.

சத்தான சாப்பாடு, கிருமிநாசினிகள் தெளிக்கப்படாத காய்கறி வகைகள், உடற்பயிற்சி, ஓய்வு, நல்ல உறக்கம், சந்தோஷம் இவையெல்லாம் ஒரு மனிதனின் வாழ்நாளை நீடிக்கும். அவை, பல பேருக்கும் கிடைப்பதில்லை. இல்லையேல், அவற்றுக்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி கொள்வதில்லை என்றே கூறவேண்டும்.

நாள் முழுவதும் வேலைச்செய்தாலும் கிடைக்கும் சம்பளம் போதாமலே இருக்கிறது. அதனால், எவ்விதமான ஓய்வும் இன்றி, வேலை, வேலையென இருப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. மேலதிக வருமானத்துக்காக பல நாட்களாக உறக்கமின்றி உழைப்போரும் இருக்கத்தான் செய்கின்றனர். இவ்வாறானவர்களே இலகுவில், மரணத்தை தழுவிக்கொள்கின்றனர்.

வயது வந்தவர்கள் மட்டுமன்றி, சிறு பிள்ளைகளும் தொற்றா நோய்களுக்கு உள்ளாகி மரணித்து விடுகின்றனர். சிறுவர்களை வீடுகளுக்குள்ளே அடைத்து வைக்காது, மைதானங்களுக்கு அனுப்பி, விளையாடுவதற்கு ஊக்குவிக்கவேண்டும். தற்போதைய சிறுவர்களில் பலர், அலைபேசியிலேயே முழு நாளையும் கழிக்கின்றனர். அதிலேயே விளையாடுகின்றனர். இது கூடாது.

விளையாடுவதற்காக சிறுவர்களிடம் அலைபேசியை கொடுப்பதன் ஊடாக, சிந்திப்பதற்கு பூட்டுப்போடப்படுகின்றது. இயந்திரத்தின் அறிவுறுத்தலின் பிரகாரம் விளையாடு என்பது ஊக்குவிக்கப்படுகின்றது. இது, சிந்தித்து செயற்படுவதையும், பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பது, முடிவெடுத்தல், ஆகியவற்றை சிறிய வயதிலேயே தடுத்துவிடுகின்றது. ஆகையால், சிறுபிள்ளைகளிடம் விளையாடுவதற்கு அலைபேசிகளை பெற்றோர்கள் கொடுப்பதை இன்றிலிருந்தாவது நிறுத்தவேண்டும்.

ஒவ்வொரு நாளும் கூடுதலாக சம்பாதிக்க வேண்டும். அதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. எனினும், ஓய்வும் சந்தோஷமும் முக்கியமாகும். இல்லையேல் தொற்றா நோய்களால் மரணங்கள் ஏற்படுவதை தவிர்க்க முடியாது.

உலகம் முழுவதும் பணி இடங்களில் நேர்ந்த விபத்து உள்ளிட்ட காரணங்களால் ஆண்டுதோறும் சுமார் 30 இலட்சம் தொழிலாளர்கள் உயிரிழப்பதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

உலகம் முழுவதும் பணி இடங்களில் நிகழ்ந்த விபத்து தொடர்பாக சர்வதேச தொழிலாளர் அமைப்பு ஆய்வு மேற்கொண்டுள்ளது. அதில், பணி இடங்களில் நிகழ்ந்த விபத்து, நோய்த் தொற்று காரணமாக ஆண்டுக்கு சுமார் 30 இலட்சம் பேர் உயிரிழப்பதாக தெரிவித்துள்ளது. அதில், ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் மட்டும் 63 சதவீத மரணங்கள் பதிவாகியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'தொற்றா (NCD) நோய்கள் காரணமாக நீடித்த நோயுற்ற நிலை, இறப்பு வீதம் மற்றும் உடல் ஊனம் அற்ற தேசம்' என்ற செயல் நோக்கை நோக்கி வழிகாட்டுகின்ற அதேவேளையில் தொற்றா நோய்களைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான தேசிய கொள்கை மற்றும் மூலோபாயத்தை சுகாதார அமைச்சு முன்னெடுக்கவேண்டும்.

அதேபோல, வாரத்தில் இரண்டொரு நாட்களாவது, காலையில் அல்லது மாலை வேளைகளில் உடற்பயிற்சியை செய்யவேண்டும். உடற்பயிற்சியை பாடசாலைகளில் இருந்து ஆரம்பிப்பதே சிறந்தது.




## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

வெறுப்பு உணர்வு சந்தோஷத்துக்கு வேட்டு. எந்த நேரமும் முகத்தை கோணலாக வைத்தப்படி, எதனையோ இழந்தப்படி இருப்பவர்களை எவர்தான் ரசித்து மகிழப் போகின்றார்கள்.

வாழக்கையை ரசிக்கத் தெரியாதவர்கள் எல்லாவற்றையும் கைவிட்டது போல் நடப்பதுண்டு. தொடர்ந்து துன்பங்கள், தோல்வி, நினைத்தவை நடக்காதுவிட்டால் அதிலிருந்து மீளும் வரை சோக இருளில், தங்கள் உருவத்துடன் வெறுத்து உலர்ந்த நிலையில் இருப்பது துணிச்சலற்ற நிலையைக் காட்டுகின்றது.

அவரவர் கஷ்டங்கள் அவரவர்களுக்குகே தெரியும் என்பார்கள். ஆனால், கஷ்ட, நஷ்டங்களைச் சந்திகாதவர்கள் எவருண்டு.

பிரச்சினைகளை அப்படியே நிலையாக வைத்தபடி, அடுத்து உடன் எழுந்து களையாமல் இருப்பது தன்னைத்தான் சிதைப்பதாக அமையும். பழையதைத் துறைந்து, புது வழி தேடுதலை சிரமம் எனக் கருதலாகாது. பலவீனத்துடன் வாழ்வது எழுச்சியைக் களைவது போலாகும். எழுவது சிரமம் அல்ல. சும்மா இருப்பதே கடினம். செயல்படுவது மேல்.

-பருத்தியூர் பால- வயிரவநாதன்



## கடிதங்கள்

### ஹட்டன் டிப்போவில் பற்றாக்குறை

இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான ஹட்டன் பஸ் டிப்போவில், சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் பற்றாக்குறை கடுமையாக உள்ளது. இதனால், போக்குவரத்து சேவை முன்னெடுப்பதில் கடும் சிரமங்களுக்கு முகங்கொடுப்பதாக டிப்போ தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது 25 சாரதிகள், 27 நடத்தனர் உள்ளனர். எனினும், அந்த டிப்போவில் 105 பேருந்துகள் உள்ளன. தினமும் 93 பஸ்களை இயக்க அட்டவணைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் பற்றாக்குறை நிலவுகின்ற போதிலும், நாளொன்றுக்கு 80 முதல் 84 பேருந்துகள் இயக்கப்படுகின்றது.

விடுமுறையை குறைப்பதன் மூலம் தினமும் 10 முதல் 12 பேருந்துகள் நிபந்தனைகளுக்கு ஏற்ப இயக்கப்படுகின்றன. மனிதவள பற்றாக்குறையால், பெரும் வருவாய் இழப்பு ஏற்படும்.மேலும் சிவனொளிபாதமலை யாத்திரை காலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. யாத்திரர்களுக்கு உரியமுறையில் பஸ்களை இயக்குவதிலும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன அறியமுடிகின்றது.

சாரதிகள் மற்றும் நடத்துனர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தால், இந்த டிப்போவின் ஊடாக கூடுதலான வருமானத்தை ஈட்டமுடியும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கறுப்பு ஜுலையின் நாற்பதாண்டுகளின் பின் 29

# 1958 கலவரம்: திறக்கப்பட்ட கசாப்புக்கடை



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

பண்டா - செல்வா உடன்படிக்கையை பௌத்த பிக்குகளின் அழுத்தத்திற்குப் பணிந்து பண்டாரநாயக்க கிழித்தெறிந்தார். அரசாங்கம் பல்முனை நெருக்குவாரங்களுக்கு உட்பட்டதாக இருந்தது. இந்த நெருக்குவாரங்களில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்கு ஒரு வாய்ப்பை உருவாக்க வேண்டிய நிலையில் பிரதமர் பண்டாரநாயக்க இருந்தார். நாட்டையும் மக்களையும் திசை திருப்புவதனூடாக நாடு எதிர்நோக்கியுள்ள சமூகப் பொருளாதார நெருக்கடிகளைப் புறந்தள்ள அவர் முடிவெடுத்தார். அதிகாரத்துக்கு வருவதற்காக அவர் உருவாக்கிய ஐம்பெருஞ் சக்திகள் (பஞ்சமா பலவேகய) அவரது இருப்புக்கே அச்சுறுத்தலாக இருப்பதை அவர் உணர்ந்து கொண்டார். ஆனால் அதை நேரடியாகச் சவாலுக்கு உட்படுத்தும் திராணியற்றவராக அவர் இருந்தார்.

இந்தப் பின்புலத்திலேயே 1958இல்; தமிழர்கள் மீது கலவரம் கட்டவிழ்த்து விடப்பட்டது. அது தற்செயலானதாகவும் அங்காங்கே நடைபெறுவது போலத் தோற்றங்காட்டினாலும் அது மிகத் தெளிவாகத் திட்டமிடப்பட்டு அரங்கேறிய ஒன்று என்பதை பலர் சான்றுகளுடன் சுட்டிக் காட்டியுள்ளார்கள். குறிப்பாக அப்போது பாராளுமன்ற உறுப்பினரான இருந்த இடதுசாரியான லெஸ்லி குணவர்த்தன தமிழருக்கெதிரான தாக்குதல்களைத் திட்டமிடும் கூட்டங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் பங்கேற்றதாகவும் அதில் வடக்குக் கிழக்குக்கு வெளியே வாழும் தமிழர்களை விரட்டியடிக்கத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாகவும் பாராளுமன்றில் ஆதாரங்களுடன் குற்றஞ்சாட்டினார். இதை பிரதமரோ ஏனைய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களோ மறுக்கவில்லை.

1958 கலவரமானது, இலங்கையின் வரலாற்றில் பெரிதும் கவனிக்கப்படாதாவொன்று. ஆனால் அடுத்த அரைநூற்றாண்டு கால இலங்கை அரசியலின் இயங்கியலில் தாக்கம் செலுத்திய பல பண்புகள் இந்தக் கலவரத்தோடு தோற்றம் பெற்றவை. அவை அனைத்துமே இலங்கையை ஒரு கசாப்புக்கடையாகத் தயார் செய்தன. 1958 கலவரம் தொடர்பில் எழுதப்பட்டவற்றில் முக்கியமானதும் நன்கறியப்பட்டதுமான நூல் தார்சி வித்தாச்சி எழுதிய *Emergency '58: The story of the Ceylon Race Riots*. இந்த நூலில் அவர் குறிப்பிடுகின்ற முக்கியமானதொரு விடயம் 1956இல் பண்டாரநாயக்க ஆட்சிக்கு வந்ததுமுதல் இலங்கைப் பொலிஸாரின் நடவடிக்கைகளில் அரசியல் குறுக்கீடுகள் தொடங்கின என்பது. அதுவரை காலமும் பொலிஸாரின் செயற்பாடுகளில் ஒரு நடுநிலைத் தன்மை இருந்தது. சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுபவர்களாக அவர்கள் மீது அனைத்து இலங்கையர்களுக்கும் நம்பிக்கையும் மரியாதையும் இருந்தது. ஆனால் 1956 முதல் தொடங்கிய அரசியல் தலையீடுகள் இரண்டு போக்குகளுக்கு வழிவகுத்தது. முதலாவது நேர்மையாகச் செயலாற்றுவது என்பது பல உயர்மட்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு சவாலாக மாறியது. அவர்களது நடவடிக்கைகள் அரசியல்வாதிகளால் முடிவாகியது. இதன்மூலம் காவல் துறையின் சுதந்திரம் காவுகொள்ளப்பட்டது. இரண்டாவது, பொலிஸ் நடவடிக்கைகளின் அரசியல்மயமாக்கம், சட்டத்தையும் ஒழுங்கையும் மீறக் காத்திருப்பவர்களுக்கு புதிய உத்வேகத்தைக் கொடுத்தது. அரசியல் ஆசி இருந்தால் எந்தவொரு குற்றத்தையும் இலகுவாகவும் தண்டனையின்றியும் செய்யமுடியும் என்ற நம்பிக்கையையும் உருவாக்கியது. இலங்கையின் முக்கியமான அரசசேவையான பொலிஸ், சீரழியத் தொடங்கியது பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலத்திலேயே என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

வித்தாச்சி தனது நூலில் குறிப்பிடுகின்ற இன்னொரு விடயம் பௌத்த பிக்குகள் பற்றியது. வித்தாச்சி அதைப் பின்வருமாறு விபரிக்கிறார்:

'பல குண்டர்கள் - அவர்களில் சிலர் நன்கு அறியப்பட்ட குற்றவாளிகள் - தங்கள் தலையை மொட்டையடித்து, மஞ்சள் நிற ஆடைகளை அணிந்து பிக்குகள் போல காட்சியளித்தனர். பொலிஸாருக்கு நன்கு தெரிந்த குற்றவாளியான ஒரு டாக்சி ஓட்டுனரை மறித்து விசாரித்த போது அவன் மொட்டையடித்திருந்தான். அவனது வாகனத்தின் இருக்கையின் மெத்தைகளுக்குக் கீழே இரண்டு அழுக்கடைந்த மஞ்சள் நிற ஆடைகளைக் கண்டார்கள். அதேபோல கொள்ளை மற்றும் தீ வைத்ததற்காக கைது செய்யப்பட்ட இரண்டு 'துறவிகள்' தொழில்முறையாகக் கார் ஓட்டுபவர்கள் என்று பொலிஸ் அறிக்கைகள் பதிவு செய்கின்றன. இனவெறியைத் தூண்டிவிட்டு, பொய்யான கதைகளைப் பரப்பி, இந்த விளையாட்டின் இலாபகரமான பக்கமான கொள்ளை மற்றும் கொள்ளையில் பங்குகொள்வதில் இந்தக் கள்ளப் பிக்குகள் ஈடுபட்டுள்ளனர். மொட்டையடித்த தலையுடன் கொள்ளையனைப் பின்தொடர்ந்து பொலிஸார் செல்லும் போதெல்லாம், அவர் ஒரு வீட்டிற்குள் மறைந்து, ஒரு துறவியின் அழிக்க முடியாத உடையில் திரும்பி வந்தார். பௌத்த துறவியாகும் சடங்கான உபசம்பத வரலாற்றில் முன்னெப்போதையும் விட வேகமாக அந்த சில நாட்களில் பொலன்னறுவையில் துறவிகள் நியமிக்கப்பட்டனர். புத்தர் தாமே அணிந்திருந்த புனித அங்கிகளில் தாங்கள் செய்யும் கொடுஞ்செயலை அவர்கள் கவனிக்கவில்லை. இந்த அச்சுறுத்தல் மிகவும் மோசமாக மாறியது, தலை மொட்டையடித்த ஒவ்வொருவரையும் கைது செய்ய பொலிஸார் முடிவு செய்தனர்'

1958 கலவரம் தொடர்பிலான முக்கியமானதொரு குறிப்பு இது. சிங்களப் பெருந்தேசியவாதம் பௌத்தத்திடம் அடைக்கலம் கோரிய முதலாவது நிகழ்வு இது. பௌத்தத்தின் பெயரால் வன்முறைகளை எந்தவித சட்டச் சிக்கலும் இன்றி அரசின் ஆசீர்வாதத்துடன் செய்ய முடியும் என்பதை குண்டர்கள் பௌத்த துறவி வேடமிட்டு 1958இல் செய்து காட்டினார்கள். அப்போது பௌத்த மதத்திற்கான 'அதியுன்னத இடம்' அரசியலமைப்பு ரீதியாக வழங்கப்படாவிட்டாலும் கூட பண்டாரநாயக்கவின் அரசாங்கம் அவ்வாறே நடந்து கொண்டது. பண்டா-செல்வா உடன்படிக்கையை கிழித்தெறிய வைத்தது பௌத்த பிக்குகளின் முக்கியமான அரசியல் நடவடிக்கை. இது இலங்கையின் அரசியலில் நேரடியான செல்வாக்கைப் பிக்குகள் உறுதிப்படுத்திய தருணம். அதேபோல 1958 கலவரமானது, சிறுபான்மையினருக்கெதிரான வன்முறையில் பௌத்த துறவிகளின் நேரடிப் பங்களிப்பை உறுதி செய்தது. இது அகிம்சையைப் போதித்த புத்தரின் போதனைகளுக்கு நேரெதிரானதாக இருந்தபோது இலங்கையின் பௌத்தத்தின் எதிர்காலத்தைக் கோடு காட்டியது. எந்தப் பௌத்தத்தை அரசியலுக்குள் கொணர்ந்து நாட்டின் அரசியலின் பகுதியாக்கினாரோ அதே வன்முறையாளர்களாலேயே இறுதியில் பண்டாரநாயக்க கொல்லப்பட்டார்.

தமிழரசுக் கட்சியின் திட்டமிடப்படாத சிறுபிள்ளைத்தனமான ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டத்திற்கு எதிர்வினையாக சிங்களப் பகுதிகளில் தமிழ்ப்பெயர்களை தார் பூசி அழிக்கும் இயக்கம் சிங்கள இனவாத பாராளுமன்ற உறுப்பினரான கே.எம்.பி. ராஜரட்ண தலைமையில் முன்னெடுக்கப்பட்டது. இது தமிழருக்கெதிரான இனவாத உணர்வுகளை சிங்களப் பகுதிகளில் தூண்டியது. இது கலவரமாக உருவெடுத்தது. குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் வன்முறைகள் அதிகரித்தன. இது நாட்டின் பிறபகுதிகளுக்கும் பரவியது. கலவரம் தொடங்கி நான்கு நாட்களாகிய பின்பும் பிரதமர் பண்டாரநாயக்க எதுவித நடவடிக்கையும் எடுக்காமல் அமைதி காத்தார். எதிர்கட்சித் தலைவர் என். எம். பெரேரா, பொலிஸாரால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட இயலாமல் இருக்கிறது என்றும் கட்டளைகளை வழங்காமல் திட்டமிட்டே பிரதமர் காலங்கடத்துகிறார் என்றும் குற்றஞ் சாட்டினார்.

இறுதியாக கலவரம் நாடு முழுவதும் பரவி கொழுந்துவிட்டெரியத் தொடங்கி நான்கு நாட்களின் பின்னர் 1958, மே 27 திகதியன்று மதியம் அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தும் உத்தியோகபூர்வக் கோரிக்கையை பண்டாரநாயக்க ஆளுநர் நாயகம் ஒலிவர் குணத்திலகவுக்கு அனுப்பினார். சுதந்திர இலங்கையின் வரலாற்றில் முதன்முதலாக அவசரகாலச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. இதைத் தொடர்ந்து இராணுவத் தளபதியான மேஜர் ஜெனரல் அன்ரன் முத்துக்குமார் தலைமையில் இராணுவம் களத்தில் இறங்கி கலவரத்தைக் கட்டுக்குள் கொண்டு வந்தது. இந்த நடவடிக்கைகளின் போதே முதன்முதலாக இலங்கையின் வடபகுதியில் இராணுவம் நிலைகொள்ளத் தொடங்கியது. கலவரம் முடிவுக்கு வந்து ஏனைய பகுதிகளில் இருந்து இராணுவம் மீளப்பெறப்பட்ட போதும் இலங்கையின் வடபகுதியில் இருந்து இராணுவம் மீளப்பெறப்படவில்லை. இராணுவத் தளபதியான அன்ரன் முத்துக்குமார் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட தமிழர் என்பதும் இராணுவத் தளபதி பதவியைப் பெற்ற முதலாவது இலங்கையர் என்ற பெருமையும் இவரைச் சாரும்.

1958 கலவரங்கள் இரண்டு முக்கிய விடயங்களைச் சாதித்தன. முதலாவது சிங்களத் தேசியவாதம் என்பது தமிழர் எதிர்ப்பு என்பதை தனது முக்கியமான கதையாடலாகக் கோட்பாட்டுருவாக்கம் செய்வதற்கான வாய்ப்பையும் நியாயப்பாட்டையும் வழங்கியது. இது அரசியல்வாதிகள், பௌத்த பிக்குகள் மற்றும் கிராமப்புறச் சிங்களவர்கள் ஆகியோரின் கூட்டிணைவால் இலகுவாகச் சாத்தியமானது. இரண்டாவது அரசியலில் இரண்டறக் கலந்துவிட்ட பௌத்தமானது சிங்கள பௌத்த பெருந்தேசியவாத அகங்காரமாகத் தன்னை வெளிப்படையாக நிலை நிறுத்தத் தொடங்கியது. அவசரகாலச் சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னரும் பண்டாரநாயக்க தனது நெருங்கிய சகாவான மாப்பிடிகம புத்தரக்கித தேரோவை தமிழருக்கெதிரான விசமப் பிரச்சாரத்தை இலங்கை வானொலியில் நிகழ்த்த அனுமதித்தார். இந்தப் புத்தரக்கித்த தான் பண்டாரநாயக்க கொலையின் பிரதான சூத்திரதாரி.




தேசிய வியாபாரச் சிறப்பு விருதுகள் 2023 நிகழ்வில்

# SLT-MOBITEL'க்கு கௌரவம்

SLT-MOBITEL நிறுவனத்துக்கு, அண்மையில் நடைபெற்ற தேசிய வியாபாரச் சிறப்புகள் விருதுகள் 2023 நிகழ்வில், நான்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தது. இலங்கையின் தொலைத் தொடர்பாடல் துறையில் ஸ்ரீ லங்கா ரெலிகொம் பிஎல்சி (SLT) காண்பிக்கும் அர்ப்பணிப்புச் சிறப்பு மற்றும் சிறந்த சாதனைகளை மேலும் உறுதி செய்து கௌரவிக்கும் வகையில் இந்த விருதுகள் அமைந்திருந்தன.

உள்நாட்டு சந்தை சென்றடைவுச் சிறப்பு இரண்டாமிடம், உட்கட்டமைப்பு மற்றும் பயன்பாடுகள் பிரிவு விருது இரண்டாமிடம், மிகப் பெரிய வியாபாரம் பிரிவுக்கான மெரிட் விருது மற்றும் கூட்டாண்மை ஆளுகைச் சிறப்பு விருது போன்றன ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டிருந்தது.

SLT-MOBITEL இன் குழும பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி பிரபாத் தஹநாயக்க மற்றும் குழும நிதி அதிகாரி சஞ்ஜீவ சமரநாயக்க ஆகியோர் இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டதுடன், நிறுவனத்தின் மேலும் சில அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

தேசிய வியாபாரச் சிறப்பு விருதுகள் (NBEA) வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படுவதுடன், வியாபார சமூகத்தினால் பெருமளவில் எதிர்பார்க்கப்படும் நிகழ்வாகவும் அமைந்துள்ளது. இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனம் (NCCSL) இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வை ஏற்பாடு செய்வதுடன், இந்த விருதுகளினூடாக, சிறப்பாக செயலாற்றி, நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கு பங்களிப்பு வழங்கிய வியாபார நிறுவனங்கள் கௌரவிக்கப்படுகின்றன.

தேசிய வியாபாரச் சிறப்பு விருதுகள் 2023 நிகழ்வில் ஸ்ரீ லங்கா ரெலிகொம் எய்தியிருந்த சிறந்த சாதனைகளினூடாக, நான்கு பிரிவுகளில் நிறுவனத்தின் சிறப்பான செயற்பாடுகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. ஸ்ரீ லங்கா ரெலிகொம்மினால் முன்னெடுக்கப்படும் முன்னணிச் செயற்பாடுகள், நவீன தொழில்நுட்பம் மற்றும் வாடிக்கையாளர் சேவைக்கான ஒப்பற்ற அர்ப்பணிப்பு போன்றவற்றை வெளிப்படுத்துவதாகவும் இந்த விருதுகள் அமைந்துள்ளன. தொலைத்தொடர்பாடல் துறையில் முன்னோடியாக SLT-MOBITEL திகழ்வதுடன், வாடிக்கையாளர் எதிர்பார்ப்புகளை தொடர்ச்சியாக விஞ்சும் வகையில் செயலாற்றுவதற்கும், புத்தாக்கத்தை முன்னெடுத்துச் செல்லல் மற்றும் இலங்கையில் டிஜிட்டல் மாற்றத்துக்கு பங்களிப்பு வழங்கல் போன்றவற்றையும் எதிர்பார்க்கின்றது.

மெக்டைல்ஸ் லங்கா செயற்பாடுகள்

# சர்வதேச ரீதியில் விரிவாக்கப்படும்




இந்திய-பசிபிக் மற்றும் பாரசீக-வளைகுடா பிராந்தியங்களில் ஸ்தாபிக்கப்பட்ட பல காட்சியறைகள் மற்றும் அலுவலகங்களுடன், மெக்சன்ஸ் டைல் லங்கா (மெக்டைல்ஸ்) சர்வதேச சந்தைகளில் தனது விரிவாக்கத்தை மேற்கொண்டுள்ளது.

மெக்சன்ஸ் ஹோல்டிங்ஸின் முகாமைத்துவப் பணிப்பாளரான மிஸ்வர் மகீன் கூறும்போது, "வடிவமைப்பில் மட்டுமல்லாது நீண்ட கால உழைப்பு மற்றும் அன்றாட பாவனைக்கு முக்கியமான பண்புகளுடனான ஐரோப்பிய தரத்திலான டைல்களை இந்தப் பிராந்தியங்களுக்கு எடுத்துச் சென்று தரையோடுகள் பிரிவில் சிறந்த தீர்வுகளை வழங்குவதே எங்களது மூலோபாயமாக காணப்படுகிறது. தயாரிப்பு உயர் தரம் கொண்டதாகவும் இத்தாலிய மற்றும் ஸ்பானிய டைல்களுக்கு நிகரானதாகவும் இருப்பதால், எங்கள் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த மதிப்பைக் கொண்டு வர கொழும்பு துறைமுகத்தின் கொள்கலன் கையாளும் ஆற்றல் மற்றும் ஏனைய நாடுகளுடனான இணைப்புத்திறன் ஆகியவற்றை நாங்கள் எமக்கு அனுகூலமாக பயன்படுத்துகிறோம்." என்று குறிப்பிட்டார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் தமது தொழிற்சாலைகளில் தொழில்நுட்பம் மேம்படுத்தப்பட்டதன் மூலம், நிறுவனம் உள்ளூர் சந்தையில் தயாரிப்புக்களை வழங்குவதில் முழுமையான திறனை அடைந்து, இப்போது அதன் விரிவாக்கத்தின் அடுத்த கட்டத்திற்கு நகர்கிறது. அவர்களின் உற்பத்தி தரம் உலகளவில் விரும்பப்படும் இலங்கை மூலப்பொருட்களிலிருந்து பெறப்படுவதுடன், தரையோடுகளை உற்பத்தி செய்வதில் இது 85% ஆக உள்ளமை குறிப்பிடத்தக்கது. மீதமுள்ளவை இத்தாலியில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ஃப்ரிட்ஸ் (frits) மற்றும் கிளேசஸ் (glazes) போன்ற உயர்தர ஐரோப்பிய தர பொருட்களிலிருந்து வருகின்றன. இவை அனைத்தும் இணைந்து, டைல் உற்பத்தியில் ஒருவர் அடையக்கூடிய தொழில்துறை தரங்களின் உச்சத்தை மெக்டைல்ஸ் அடைய உதவியது என்று நிறுவனம் கூறுகிறது.

தற்போது இந்நிறுவனம் சவுதி அரேபியா, இந்தோனேசியா, மாலைதீவு, நைஜீரியா, கென்யா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளில் செயல்பட்டு வருகிறது. "இந்திய-பசிபிக் மற்றும் பாரசீக-வளைகுடா பகுதிகளுக்கான எங்கள் விரிவாக்கம் நன்கு சிந்தித்து, திட்டமிடப்பட்ட நடவடிக்கையாகும். ஏனெனில் கட்டுமானத்தில் இந்நாடுகளின் வளர்ச்சி வாய்ப்பு தொடர்பான கணிப்புகள் அதிகமாக உள்ளன. நாங்கள் இப்போது அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலியா போன்ற ஐரோப்பிய மற்றும் பசிபிக் சந்தைகளுக்கு விரிவாக்கம் செய்வதற்கான முயற்சிகளை எடுத்துள்ளதுடன் இதற்கான திட்டங்கள் ஏற்கனவே நடைமுறையில் உள்ளன. இலங்கை தேயிலை அல்லது ஆடைத் தொழில் துறை போன்று இலங்கைக்கான மற்றொரு தனித்துவமான ஏற்றுமதி வர்த்தகநாமத்தை கட்டியெழுப்புவதற்கான முதல் படியை எடுப்பதே எமது இறுதி இலக்காகும்," என முகாமைத்துவப் பணிப்பாளர் கூறினார்.

இதற்கிடையில், நைஜீரிய கட்டுமாண சந்தை, 2022 இல் 135.9 பில்லியன் டொலர் மதிப்புடையதாக காணப்பட்டதுடன், அடுத்த 3 ஆண்டுகளில் 2% வளர்ச்சி வீதத்தை அனுபவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது வீடமைப்பு மற்றும் கைத்தொழில் கட்டுமாண திட்டங்களில் கணிசமான முதலீடுகளால் முன்னெடுக்கப்படுகிறது. 17.3 பில்லியன் டொலர் மதிப்புடைய கென்யாவின் கட்டுமாணச் சந்தை, அரச-தனியார் கூட்டு முயற்சிகள் மற்றும் தனியார் முதலீடுகளால் ஆதரிக்கப்பட்டு, வருடாந்த வளர்ச்சி வீதம் 5% ஐத் தாண்டிவிடும் என்று கணிக்கப்பட்டுள்ளது. சந்தையில் உள்ள முக்கிய துறைகளில் குடியிருப்பு, வணிக, கைத்தொழில் மற்றும் நிறுவனக் கட்டுமாணம் ஆகியவை அடங்கும்.

மாலைதீவு கட்டுமாணத் துறை அடுத்த மூன்று ஆண்டுகளில் 7.7% என்ற நிலையான வருடாந்த வளர்ச்சி வீதத்திற்கு தயாராக உள்ளதுடன், இது அரசாங்க உட்கட்டமைப்பு திட்டங்கள், தனியார் துறை குடியிருப்பு முயற்சிகள் மற்றும் சுற்றுலாத் துறையில் முன்னேற்றம் ஆகியவற்றால் தூண்டப்படுகிறது. அதே நேரத்தில், இந்தோனேசிய கட்டுமாணத் துறை 2023இல் 3% வளர்ச்சியடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு அரசாங்கம் அளிக்கின்ற முக்கியத்துவத்தால் ஆகும். ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் சவுதி அரேபிய பொருளாதாரத்தின் சாரமாக இருக்கும் கட்டுமாணத் துறை, இந்த நாடுகளின் பொருளாதார மேம்பாடு மற்றும் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது.

## மழையின் பாடல்

அடை மழையொன்று
இடைவிடாதுபாடுகிறது
புரியாதராகத்தில்!

மண் மேட்டிலும்
புல் வெளியிலும்
நேசப் பெருவெள்ளம்!

ஆறுகள் குளங்கள்
கடல்கள் எல்லாம்
நிறைமகிழ்ச்சிக் கோலங்கள்!

நீராடும் சாலைகளில்
மழைக்காலஓவியங்கள்!

புன்னகைஎழிலாடும்
சிறுசெடியின் சிற்றிலைகளில்
நீர் வண்ணச் சிதறல்கள்!

பெரும் தருவொன்று
உயிர்ப் பிடிப்பைத்
தளரவிட்டுக் கொண்டிருக்கிறது!


மாடிவீட்டின் சாளரம் வழியே
தேநீரைசுவைத்துக் கொண்டு
அழகுமழையை
ரசிக்கின்றான் ஒருவன்!

ஓலைக் குடிசைக்குள்
கூரை வழி ஒழுகும் மழையை
வெற்றுத் தேநீர்க் குவளைகளுக்குள்
ஏந்திக் கொண்டிருக்கிறாள் ஒருத்தி!

இப்போது கூறுங்கள்
இந்தமழை
என்னராகத்தில் பாடுகிறது?



வேலணையூர் ரஜிந்தன்



## மதம் ஒருமாத்திரை

அடக்குமுறையாளனுக்கு
இந்தபூமிபோதாது
நீங்கள் தானே
தலைசிறந்த
உற்பத்தியாளர்கள்
தேவைஎன்றால்
ஒருபுதியபூமியை
தெரிவுசெய்து
போய் விடுங்கள்

இரக்கம் உள்ளவனுக்கு
இந்தபூமிஅதிகம் தான்
இன்னும் எத்தனைபேர்
வேண்டுமானாலும்
வாழ்ந்துவிட்டுபோகலாம்


உடல்
ஆரோக்கியமானவனுக்கு
மாத்திரைதேவையில்லை
மனம்
மகிழ்ச்சியானவனுக்கு
மதங்களும் தேவையில்லை

தூங்குவதற்குகிடைத்த
வலிமாத்திரைகள் தான்
மதங்கள்
நீங்கள் தொடர்ந்து
தூங்கிக் கொண்டே
இருக்கிறீர்கள்

சிலர் அதைதூக்கி
வீசிவிட்டார்கள்
வீசியமாத்திரையின்
மறுபக்கத்தில் இருக்கிறது
பகுத்தறிவு

இருளில் விழித்து
இருப்பதற்கானதல்லவிளக்கெண்ணை
விட்டுக் கொஞ்சம்
விளக்கைஏற்றுங்கள்
இருள் அகலட்டும்

இயற்கையைமறுத்துவிட்டு
கடவுளைபடைத்தவனை
நாடுகடத்தாமல் விட்டது
காலத்தின் தப்பு
இன்றுபலர்
கடவுளின் பெயரால்தான்
காலத்தையேகடத்துகிறார்கள்.



ரவிகாந்தன்
திருகோணமலை

## ஆணந்தான்

வேலியில் வேம்புமரங்கள் அது
வெளியிடும் காற்றிலேநலன்கள்
வெளியிலேதென்னைமரங்கள் அவை
வெயிலுக்குகொடுக்கும் நிழல்கள்
முற்றத்தில் தோடை வகைகள் அதில்
முற்றிவிழும் மஞ்சல் பழங்கள்
முட்களில் இல்லையங்குவிசங்கள் அவ்
முட்டகள்விழத் தெரியும் அடித்தடங்கள்.

ஓலையால் வேய்ந்தமனைகள் அங்கு
உள்ளுக்குள் இருக்கக் குளிரல்
மாலையில் பெய்யமழைகள்
மயங்கிடும் மதியவள் விழிகள்
மலையினில் மோதிடமுகில்கள்
மயக்கமேகலைக்கும் ஒளிகள்
மழைவிழக் கலையுமே இருள்கள் அப்போ
மனதினில் பொங்குமேஅலைகள்

அலைகளில் குழம்பியமனங்கள்
அணைத்திடத் துடித்திடும் கரங்கள்
வலையினில் வீழ்த்திடக் கயல்கள்
வாலிபம் துடித்திடும் மொழிகள்
நிலையினை இழந்ததுணைகள்
நெஞ்சினில் சுமந்திடும் ரசங்கள்
அலைவினில் அகப்பட்டகணங்கள்
அடிக்கடிநினைப்பதேரணங்கள்.

காலையும் மாலையும் நடைகள்
கண்டிடவிரையும் கண்கள்
சாலையில் தெரிகிறநிழல்கள்
சகலதும் எனதென்றகுணங்கள்
மாலைகள் மாற்றிடும் தினங்கள்
மகிழ்ச்சியில் திளைத்திடும் புலன்கள்
வாலையில் தொடர்ந்திடும் வலிகள்
வாலிபம் தொலைவதேவசந்தங்கள்.

ஆலையில் இட்டகரும்புகள்
ஆண்களின் வாழ்க்கைவட்டங்கள்
மூலையில் போட்டகல்லுகள்
மூளைக்குள் காணும் மூளிகள்
வேலைக்குமட்டுமேவேண்டல்கள்
வெற்றிக்குஅவரேவேண்டர்கள்
பாலையில் போட்டஉலக்கைகள்
பகலெல்லாம் அவராலேகுத்துக்கள்..

நீலையூர் சுதா



## புரியாதபுதிர்நீ




ஆடுகளைஅறுக்கிறாய்..
விளக்கைக் கொளுத்தி
வைத்திருந்தாய்.
வெளிச்சம் தரவாயிருக்கும்
என்றுஎண்ணியிருந்தேன்.

எத்தனைவிட்டில்
பூச்சிகளைகொன்று
புதைத்தாய்.
யாருக்குத் தெரியும்?

நரகத்தையொத்தகெட்ட
வெயில் நீ.
நீவெகுஏழை.
நீவெகுஊனன்.
நீ குருடு,
நீஒருசப்பாணி.

போஜன மேஜையில்
மலம் குவித்தாய்.
சமாதானத்துக்கானவைகளை
கேட்டுக்கொள்ள
உன்னிடம் எதுவுமே இல்லை.

ஐயோ,போடாபடுபாவி.
விரிக்கப்பட்ட உன் புத்தகத்தில்
ஒருநற்செய்தியுமே இல்லை.



கெக்கிராவ ஸுலைஹா



# எதிர்காலத்தை கொய்யும் உலகம்



இராசதுரை கீர்த்தனா
நான்காம் வருடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

உணர்ச்சி ரீதியான துஷ்பிரயோகமென்பது வெளிப்படையாகவே மறுத்து விலக்குதல், தனிமைப்படுத்தல், அவமானப்படுத்தல், பயமுறுத்தல், கெடுத்தல், சுரண்டிப்பிழைத்தல், சூழலுடன் இடைத் தொடர்பை மேற்கொள்ளும் சிறுவர்களது பிரயத்தனங்களுக்கு தண்டனையளித்தல் போன்ற செயற்பாடுகள் உணர்ச்சி ரீதியிலான சிறுவர் துஷ்பிரயோகமாகக் கொள்ளப்படுகிறது.

இதுவும் சமூகத்தில் நாம் அன்றாடம் சங்கமிக்கும் சூழலில் ஏற்படுவதை கண்கூடாக காணமுடிகின்றது. அதேபோல் ஒரு சிறுவனுக்குரிய உடை, உணவு, சுகாதாரம், பாதுகாப்பு, மருத்துவம், கல்வி போன்ற அடிப்படைத் தேவைகள் மறுக்கப்படுகின்ற போது அச்சிறுவன் புறக்கணிப்பு ரீதியிலான துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகின்றான்.

இன்றைய காலத்தில் சிறுவர் பாதுகாப்பு என்பது மிகவும் அவசியமான ஒன்றாகும். உடல், உள ரீதியில் ஊனமுற்ற சிறுவர்கள், பெற்றோரை இழந்த சிறுவர்கள், பெற்றோரை விட்டுப் பிரிந்த சிறுவர்கள் மற்றும் சிறுவர் தொழிலாளர்களை பாதுகாப்பதும் துஷ்பிரயோகத்திற்கு இலக்காவதை தடுப்பதும் முக்கியமானதாகும். எதிர்கால உலகின் சவால்களை வெற்றிகொள்ளக்கூடிய நற்பண்பும், அறிவும் நிறைந்த பலமிக்க பிள்ளையை நாட்டுக்கு வழங்குவதற்காகவும் சிறுவர்களைப் பாதுகாக்க வேண்டியது முக்கியமானதாகும்.

## குடும்பத்தின் மூலமான சிறுவர் பாதுகாப்பு

■பிள்ளைகளுடன் மனம் விட்டுக்கதைத்தல்

■ஆபத்தானவர்கள் யாரென கற்றுக்கொடுத்தல்

■பிள்ளைகளுக்கு சுயபாதுகாப்பைக் கற்றுக்கொடுத்தல்.

■பிள்ளைகள் அவர்களுடைய பெயர், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் மற்றும் தொலைபேசி பயன்படுத்தும் முறையினை அறிந்திருத்தல் வேண்டும்.

■பெற்றோர்களிடம் அனுமதி பெறாமல் எந்தவொரு நபருடனும் எந்தவொரு இடத்துக்கும் செல்லக்கூடாது என்பதனை பிள்ளைகளுக்கு அறிவூட்டல்.

■விரும்பத்தகாத, மனதுக்கு தொல்லை தரக்கூடிய எந்தவொரு சம்பவம் நிகழ்ந்த போதிலும் அவற்றைப் பெற்றோருக்கு வெளிப்படுத்துமாறு அறிவூட்டல்.

■தெரியாத நபர்கள் கொடுக்கின்ற இனிப்பு மற்றும் பரிசுப்பொருட்களை ஒருபோதும் வாங்கக்கூடாது என அறிவுறுத்தல்.

■எந்த சந்தர்பத்திலும் வாகனம் ஒன்றில் தனியாக செல்லவேண்டாமெனவும் பெற்றோரின் அனுமதியின்றி அவர்களுடன் செல்லக்கூடாது எனவும் அறிவுறுத்தல்

> **சிறுவர் பாதுகாப்பு என்பது மிகவும் அவசியமான ஒன்றாகும். உடல், உள ரீதியில் ஊனமுற்ற சிறுவர்கள், பெற்றோரை இழந்த சிறுவர்கள், பெற்றோரை விட்டுப் பிரிந்த சிறுவர்கள் மற்றும் சிறுவர் தொழிலாளர்களை பாதுகாப்பதும் துஷ்பிரயோகத்திற்கு இலக்காவதை தடுப்பதும் முக்கியமானதாகும்**

## பாடசாலையில் பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்

■பிள்ளைகள் வழக்கமான நேரம் முடிவதற்கு முன்னர் ஒருபோதும் பாடசாலை வளாகத்தை விட்டு வெளியேறக்கூடாது எனப் பிள்ளைக்கு அறிவுறுத்தல்.

■பாடசாலையின் அருகில் பொருட்கள் விற்பனை செய்பவர்களிடம் அவதானிப்பாகவும், எச்சரிக்கையாகவும் இருப்பதற்கு அறிவூட்டல்.

■பிள்ளையொன்று தனியாக இருக்கும் சந்தர்ப்பங்களிலேயே பெரும்பாலும் ஆபத்திற்குள்ளாகின்றது. எனவே நண்பர்களுடன் இருக்குமாறு அறிவுறுத்தல்

■பாடசாலை வாகனங்களில், துவிச்சக்கர வண்டிகளில் செல்பவர்களாயின் சாரதி நம்பிக்கைக்குரியவராகவும் ஒழுக்கமானவராகவும் இருக்கிறார் என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

## இணையப் பாவனையின் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை

■பிள்ளைகள் கணினியை பயன்படுத்தும் போது பெற்றோர்களுக்கு தெரியக்கூடிய வகையில் வீட்டின் பொதுவான ஓரிடத்தில் கணனியைப் பொருத்துதல்.

■அறிவினை வளர்ப்பதற்கும், தகவல்களை பெறுவதற்கும் அரிய சாதனமாக உள்ள போதிலும் எதிர்பாராத விதமாக சில பிரச்சினைகளில் சிக்கவைக்ககூடிய பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியதாகவும் இருப்பதாக அறிவுறுத்தல்.

■சமூக வலைத்தளங்களில் பிள்ளைகள் தமது பெயர், வீட்டு முகவரி, பாடசாலையின் பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படங்களை ஒருபோதும் பகிர்ந்து கொள்ளக்கூடாது என அறிவுறுத்தல்.

■வலைத்தளங்கள் மற்றும் இணையம் மூலமாக அறிமுகமற்றவர்கள் அனுப்புகின்ற அழைப்புக்களை ஏற்றுக்கொள்ளல் கூடாது என அவர்களுக்குத் தெளிவுபடுத்தல்.

■இணையத்தில் தங்கள் தகவல்களை பகிர்ந்து கொள்ளும் நபர்கள் உண்மையான தகவல்களை பகிர்ந்துகொள்கின்றார்கள் என நம்பி ஏமாறக்கூடாது எனக் கூறுதல்.

சிறுவர்கள் மீதான உடல், உள, பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்கள், இன்று மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும், நாட்டின் நற்பெயருக்கும் சவாலாக மாறியுள்ளது. சிறுவர்கள் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகாமல் அவர்களைப் பாதுகாப்பது குறித்த நடவடிக்கைகளை சமூகத்தின் ஒவ்வொரு தரப்பினரும் சமூகப் பணியாக உணர்ந்து செயலாற்றும்போது அப்பாவிச் சிறுவர்களை பாதுகாக்க முடியும்.

நாட்டின் எதிர்காலம் சிறப்பாக அமையவும், சிறப்பான சூழ்நிலை உருவாகவும் வேண்டுமானால் சிறுவர்களை சரியான தடத்தில் வழிநடத்த வேண்டியது அவசியமாகும். துஷ்பிரயோகங்களைத் தடுக்கும் வழிமுறைகளும், அதனை மீறுவோருக்கான தண்டனைகளும் சட்டரீதியிலும், சமூகரீதியிலும் உருவாக்கப்பட்டு அவை நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும் நாட்டின் ஏதோ ஒரு மூலையில் சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டு வருவது தவிர்க்க முடியாத ஒன்றாக மாறியிருப்பது கவலைக்குரியதாக இருக்கின்றது.

இதற்கான காரணம் என்ன என்பதை மனிதநேயம் உள்ள ஒவ்வொருவரும் அறிந்து அதனை தடுப்பதற்கான உடனடிக் காரணி யாதென்பதைக் கண்டறிவதில் பெருமுனைப்புடன் செயற்பட வேண்டும். (முற்றும்)





## “வாழும்போதே வாழ்த்துவோம்”

‘கல்விக்கு கரம் கொடுப்போரை வாழும்போதே வாழ்த்துவோம்” என்ற தொனிப்பொருளிலான நிகழ்வு மாத்தளை கல்வி வலயத்துக்கு உட்பட்ட உன்னஸ்கிரிய வாணி தமிழ் வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் க.மேகவர்ணன் தலைமையில் இடம்பெற்றது.





## ஒளிவிழா

கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியின் வருடாந்த ஒளிவிழா கல்லூரி அதிபர் அருட்சகோதரர் .ச.இ.றெஜினோல்ட் FSC தலைமையில் மிகவும் சிறப்பாக புதன்கிழமை (29) நடைபெற்றது. பிரதம அதிதியாக இந்தியா இலங்கை நாடுகளின் டி லாசலா சபையின் மாகாண விருந்தினர் அதிவண. அருட்சகோ. பேற்றம் பெரேரா கலந்து சிறப்பித்தார்.

வி.ரி.சகாதேவராஜா







## நன்கொடை

கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு பல்வேறு வழிகளில் உதவிக்கரம் நீட்டிக்கொண்டிருக்கும் அமெரிக்க சர்வதேச மருத்துவ சுகாதார அமைப்பினால் (International Medical Health Organization) மீண்டும் நன்கொடை வழங்கியுள்ளது.
வைத்தியசாலையின் நோயாளிகளுக்கும், நோயாளிகளின் உதவியாளர்களுக்காகவும் 250 பிளாஸ்ரிக் கதிரைகள் மற்றும் 300 தலையணைகள் என்பன அமெரிக்க சர்வதேச மருத்துவ சுகாதார அமைப்பின் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளரினால் வைத்தியசாலையின் கேட்போர்கூடத்தில் வைத்து புதன்கிழமை (29) கையளிக்கப்பட்டது.

வி.ரி.சகாதேவராஜா



## தாதியர் நியமனம் வழங்கி வைப்பு

நோயாளர் பராமரிப்பு சேவைகளை வலுப்படுத்தும் வகையில் 2018 ஆம் ஆண்டு தாதியர் பயிற்சிக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட தாதிய பயிலுநர்களுக்கு சுகாதார அமைச்சு கடந்த வாரம் தாதியர் நியமனங்களை வழங்கியது.
அந்த வகையில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு இணைப்புச் செய்யப்பட்ட தாதியர்களை கல்முனை பிராந்திய வைத்தியசாலைகளுக்கு நியமித்து அவர்களுக்குரிய புதிய சேவை நிலையங்களுக்கான கடிதங்களை கையளிக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (28) இடம்பெற்றது.

நூருல் ஹுதா உமர்



இஸ்ரேல்

# இடைக்கால போர் நிறுத்தம் தொடர்கிறது



ஹமாஸ் அமைப்பினரை ஒழிக்கும் வரை போர் ஓயாது என காசா மீது இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் நடத்தி வந்தது. கட்டார், எகிப்து, அமெரிக்கா ஆகிய நாடுகள் போர் நிறுத்த முயற்சியை மேற்கொண்டன.

இதன் பயனாக கடந்த வெள்ளிக்கிழமை (24) போர் நிறுத்தம் செய்யப்பட்டதாக இஸ்ரேல் அறிவித்தது. அதனையடுத்து

பிணைக்கைதிகளை ஹமாஸ் அமைப்பினர் விடுவித்தனர். அதற்குப் பதிலாக சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த பலஸ்தீனர்களை இஸ்ரேல் விடுவித்தது. முதலில் நான்கு நாட்கள் போர் நிறுத்தம் ஏற்பட்டது. அதன்பின் இரண்டு நாட்கள் நீட்டிக்கப்பட்டது.

6 நாள் போர் நிறுத்தம் வியாழக்கிழமை (30) முடிவுக்கு வந்தது.

இந் நிலையில் "இராணுவ நடவடிக்கை செயல்பாடுகள் நிறுத்தப்பட்டது அப்படியே தொடரும். வரையறைக்கு உட்பட்டு மத்தியஸ்தரர்கள் பிணைக்கைதிகளை மீட்கும் நடவடிக்கையை மேற்கொண்டு தொடருவதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது" என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.



சம்பியன்ஸ் லீக்

# சமநிலையில் மியூனிச்

## கோப்பென்ஹேகன் போட்டி

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரில், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற டென்மார்க் கழகமான கோப்பென்ஹேகனுடனான போட்டியை 0-0 என்ற கோல் கணக்கில் ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பயேர்ண் மியூனிச் சமப்படுத்தியது.

இதேவேளை, போர்த்துக்கல் கழகமான பென்ஃபிக்காவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 3-3 என்ற கோல் கணக்கில் இத்தாலிய சீரி ஏ கழகமான இன்டர் மிலன் சமப்படுத்தியது. இந்நிலையில் தமது மைதானத்தில் நடைபெற்ற இன்னொரு சீரி ஏ கழகமான நாப்போலியுடனான போட்டியை 4-2 என்ற கோல் கணக்கில் ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்றிட் வென்றது. இதேவேளை துருக்கியக் கழகமான கலடசரேயின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 3-3 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட் சமப்படுத்தியது.

இந்நிலையில், இன்னொரு லா லிகா கழகமான செவிய்யாவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 3-2 என்ற கோல் கணக்கில் நெதர்லாந்துக் கழகமான பி.எஸ்.வி ஐந்தோவன் வென்றது.

பலஸ்தீன்

# எலான் மஸ்க்-க்கு அழைப்பு விடுத்த ஹமாஸ்

காசா எல்லை பகுதிக்கு வந்து, இஸ்ரேல் செய்திருக்கும் நாச வேலைகளையும் பாருங்கள் என உலகின் முன்னணி பணக்காரர்களில் ஒருவரான எலான் மஸ்க்-க்கு ஹமாஸ் அமைப்பின் மூத்த தலைவர் அழைப்பு விடுத்திருக்கிறார்.

"காசா எல்லைக்கு வந்து, காசா மக்களுக்கு எதிராக செய்யப்பட்டுள்ள அழிப்பு நடவடிக்கைகளை கண்கூடாக பார்த்து தெரிந்து கொள்ள எலான் மஸ்க்கை நாங்கள் அழைக்கிறோம். 50 நாட்களுக்குள் பாதுகாப்பில்லா காசா மக்கள் வீடுகளின் மீது 40 ஆயிரம் டன் வெடிபொருட்களை இஸ்ரேல் கொட்டித்தீர்த்துள்ளது."

"மேலும் இஸ்ரேல் உடனான உறவை நீட்டிப்பது குறித்தும், அவர்களுக்கு ஆயுதங்களை வழங்குவது குறித்தும் அமெரிக்கா பரிசீலனை செய்ய வேண்டும்,"என்று ஹமாஸ் அமைப்பின் மூத்த தலைவர் ஒசாமா ஹம்டன் தெரிவித்துள்ளார்.



வடகொரியா

# அமெரிக்காவின் அழைப்பை நிராகரித்த கிம் யோ ஜாங்



செயற்கைக் கோள் மூலம் வெள்ளை மாளிகை, பென்டகன் படத்தை பெற்றதாக வடகொரியா தெரிவித்திருந்தது.

"அண்டை நாடுகளுக்கு மிரட்டல் விடுவதாக உள்ளது" என அமெரிக்க தூதர் லிண்டா தாமஸ்-க்ரீன் பீல்டு விமர்சித்திருந்தார்.

மேலும், "எந்தவித நிபந்தனை இல்லாமல் பேச்சுவார்த்தைக்கு அமெரிக்கா தயாராக இருப்பதாகவும், நேரத்தையும் பேசக்கூடிய கருத்தையும் வடகொரியாவே முடிவு செய்து கொள்ளலாம்" எனக் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், கிம் ஜாங் உன்னின் சகோதரியான கிம் யொ ஜாங் அமெரிக்காவின் அழைப்பை நிராகரித்து அமெரிக்காவின் குற்றச்சாட்டை மறுத்துள்ளார்.



# பாலமுனை சுப்பர்ஒக்கிட்டுக்கு விளையாட்டு உபகரணங்கள்

அஸ்ஹர் இப்றாஹிம்

பாலமுனை சுப்பர் ஒக்கிட் விளையாட்டுக் கழக வீரர்களை கால்பந்தாட்டத் துறையிலும் ஏனைய விளையாட்டுத் துறையிலும் ஊக்குவிக்கும் வகையில் கழகத்தின் உப தலைவரும் தொழிலதிபருமான எச்.எம். அன்ஸாரின் பங்களிப்புடன் பாதணிகளும், விளையாட்டு உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டது.



# அகிலத்திருநாயகிக்கு யாழ்ப்பாணத்தில் கௌரவிப்பு

எஸ். நிதர்ஷன்

பிலிப்பைன்ஸில் அண்மையில் நடைபெற்ற தேசிய மாஸ்டர்ஸ் மற்றும் சிரேஷ்ட தடகளவீரர்களுக்கான போட்டியில் 72 வயதில் இரண்டு தங்கப் பதக்கங்கள் வென்று சாதனை படைத்த முல்லைத்தீவைச் சேர்ந்த அகிலத்திருநாயகிக்கு யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் கௌரவிப்பு இடம்பெற்றது.

யாழ். சிறைச்சாலையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் ஆரம்பத்தில், யாழ். மாவட்ட செயலகத்தின் முன்பாக வைத்து மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் உத்தியோகத்தரால் அகிலத்திருநாயகி கௌரவிக்கப்பட்டார்.

தென்காசி

# தலைக்கவசம் அணிந்ததால் அபராதம்



குற்றாலம் பகுதியில் வித்தியாசமான உருவம் கொண்ட தலைக்கவசம் அணிந்து வலம் வந்த இளைஞனொருவருக்கு பொலிஸாரால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. குறித்த இளைஞன் ஏதேனும் குற்ற செயலை செய்யத்தான் சுற்றி வருகிறாரோ என்று பொதுமக்கள் பொலஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

விசாரணையில் பொழுதுபோக்குக்காகத்தான் அணிந்திருந்ததாகவும், வேறு எந்த நோக்கமும் இல்லையென்றும் இளைஞர் தெரிவித்திருக்கிறார். இதனையடுத்து அவருக்கு மோட்டார் வாகன சட்டப்படி ரூ.10 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது.

## அம்பாறை டி.எஸ். சேனநாயக்கவை

# வென்ற பண்டாரவல சென். தோமஸ்

அஸ்ஹர் இப்றாஹிம்

பண்டாரவளையில் அண்மையில் நடைபெற்ற அம்பாறை டி.எஸ். சேனநாயக்க தேசிய கல்லூரியை பண்டாரவல சென். தோமஸ் கல்லூரி வென்றது. டி.எஸ். சேனநாயக்க தேசிய கல்லூரியில் றக்பி விளையாட்டு அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் முதன்முதலாக இப்போட்டி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.



மணிப்பூர்

# மத்திய அரசுடன் அமைதி ஒப்பந்தம் செய்த ஆயுதக் குழு

மணிப்பூரில் மாநிலத்தில் மே மாதம் 3-ம் திகதி முதல் மெய்தி மற்றும் குக்கி சமூகத்தினருக்கு இடையே மோதல் ஏற்பட்டது. இது கலவரமாக வெடித்த நிலையில், நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். இதையடுத்து, மணிப்பூரில் அமைதியை நிலைநாட்ட, ஆயுதக் குழுக்களுடன் மத்திய, மாநில அரசுகள் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்தி வந்தன.

இந் நிலையில் மணிப்பூரில் ஆயுதமேந்தி போராடிவந்த ஐக்கிய தேசிய விடுதலை முன்னணி , மத்திய அரசு மற்றும் மணிப்பூர் அரசுடன் புதுடெல்லியில் அமைதி ஒப்பந்தத்தில் புதன்கிழமை (29) கையெழுத்திட்டது.

நாட்டின் வட கிழக்குப் பகுதியிலும் குறிப்பாக மணிப்பூரிலும் அமைதியின் புதிய சகாப்தத்தை உருவாக்குவதற்கு இந்த ஒப்பந்தம் வழிவகுக்கும் என மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

"மணிப்பூரில் ஆயுதக் குழு வன்முறையைக் கைவிட்டு, தேசிய நீரோட்டத்திற்குத் திரும்ப ஒப்புக்கொள்வது இதுவே முதல் முறையாகும். ஆயுதக் குழுவான யு.என்.எல்.எஃப்., மத்திய அரசு, மணிப்பூர் மாநில அரசுடன் டெல்லியில் அமைதி ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டது.

இந்த உடன்படிக்கையின் மூலம் கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக நிலவிய சிக்கல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது" என உள்துறை அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 01, டிசெம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.